(பதிப்புரிமையுடையது) உ



விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
8 சைவசமய பாடப்பரீட்சை : 2025
தரம் எட்டு



www.nselva.com

காலம்	1.30 மணி
புள்ளிகள் : 100	

இல.	
மாணவர்	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. (அ) மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. உத்தலாகரின் மகன்
   1) சுவேதகேது 2) ராகுகேது 3) மார்க்கண்டேயர் 4) பிரகலாதன்
2. இருவாரங்களுக்கு ஒருமுறை நிகழும் நைமித்தியக் கிரியை.
   1) மாசிமகம் 2) சுக்கிரவாரம் 3) பிரதோஷம் 4) மகாமகம்
3. பன்றி வடிவில் மண்ணைக் குடைந்தவர்.
   1) பிரமா 2) விஷ்ணு 3) வீரபத்திரர் 4) விநாயகர்
4. கோயில் எனச் சிறப்பிக்கப்படும் தலம்.
   1) திருச்செந்தூர் 2) திருவீழிமிழலை 3) சீர்காழி 4) சிதம்பரம்
5. திண்ணனார் வழிபட்ட இறைவனின் திருநாமம்.
   1) காளத்திநாதர் 2) அவிநாசியப்பர் 3) கேதாரநாதர் 4) குற்றாலநாதர்
6. ''காப்பதோர் வில்லும் அம்பும்.....'' என்னும் பதிகம் பாடியவர்.
   1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரர் 4) திருமூலர்
7. சிவன் பார்வதி தேவியைத் திருமணம் செய்த நன்னாள்.
   1) வைகாசிவிசாகம் 2) மாசிமகம் 3) ஆடிச்சோதி 4) பங்குனி உத்தரம்
8. வழித்துணைப் பிள்ளையார் அமைந்துள்ள ஊர்.
   1) சிலாபம் 2) கட்டுக்கலை 3) முறிகண்டி 4) நல்லூர்
9. மாயவனாறு தீர்த்தம் அமைந்துள்ள திருத்தலம்.
   1) முன்னேஸ்வரம் 2) திருக்கேதீஸ்வரம் 3) நகுலேஸ்வரம் 4) திருக்கோணேஸ்வரம்
10. இலங்கையில் கண்ணகி வழிபாட்டை அறிமுகப்படுத்திய மன்னன்.
    1) இராஜசிங்கன் 2) பராக்கிரபாகு 3) முதலாம்கஜபாகு 4) எல்லாளன்
11. சாமகானத்தை இனிமையாகப் பாடியவர்.
    1) இராமன் 2) கஜபாகு 3) இராஜராஜன் 4) இராவணன்
12. சிவபெருமானால் திருமணத்தின் போது தடுத்தாட்கொள்ளப்பட்டவர்.
    1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரர் 4) திருமூலர்
13. திருச்சாழல் என்னும் நூலை அருளியவர்.
    1) திருஞானசம்பந்தர் 2) திருமூலர் 3) மாணிக்கவாசகர் 4) சேந்தனார்
14. 'ஈவது விலக்கேல்' என்னும் கூற்று இடம் பெறும் நூல்.
    1) மூதுரை 2) ஆத்திசூடி 3) நல்வழி 4) திருக்குறள்
15. அறிவிக்காமலே அறியும் பொருள்
    1) பதி 2) பசு 3) பாசம் 4) ஆணவம்

16. ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களை உடைய ஆன்மா.
1) விஞ்ஞானகலர் 2) பிரளயாகலர் 3) சகலர் 4) திரிமலத்தார்
17. ஒன்பது பேரால் அருளப்பட்ட நூல்.
1) திருப்பல்லாண்டு 2) திருமந்திரம் 3) பெரியபுராணம் 4) திருவிசைப்பா
18. காரைக்கால் அம்மையாரின் கணவரின் பெயர்.
1) புனிதத்தன் 2) திண்ணனார் 3) பரமதத்தன் 4) கலிப்பகையார்
19. தோத்திரநூலாகவும், சாத்திர நூலாகவும் போற்றப்படுவது.
1) திருமந்திரம் 2) திருப்புகழ் 3) திருவிசைப்பா 4) பெரியபுராணம்
20. கந்தரனுபூதி எனும் நூலை இயற்றியவர்.
1) திருமூலர் 2) அருணகிரிநாதர் 3) சேந்தனார் 4) ஔவையார்
21. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை வருவது
1) மாசிமகம் 2) பங்குனிஉத்தரம்
3) வைகாசிவிசாகம் 4) மகாமகம்
22. கர்ப்பூரக் கந்தன் வீற்றிருக்கும் தலம்.
1) கதிர்காமம் 2) செல்வச்சந்நிதி 3) நல்லூர் 4) மண்டூர்
23. புயல்வணன் எனப் போற்றப்படுபவன்
1) பிரமா 2) வருணன் 3) விஷ்ணு 4) வீரபத்திரர்
24. சிதம்பர நடராஜர் தரிசனத்தினால் விசேடம் பெற்ற நாள்.
1) ஆனிஉத்தரம் 2) வைகாசிவிசாகம் 3) ஆடிச்சோதி 4) ஆவணிமூலம்
25. புராணங்களின் மொத்த எண்ணிக்கை.
1) பத்து 2) பதினெட்டு 3) இருபத்தெட்டு 4) இருநூறு

(25 x 1 = 25 புள்ளிகள்**)**

2. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. உழவாரப் படையாளி எனப் போற்றப்படுபவர் யார்?
2. மயிலுக்குப் போர்வை கொடுத்தவன் யார்?
3. சுந்தரருக்கு நெல் கொடுத்து உதவிய செல்வந்தர் யார்?
4. உகந்தை முருகன் ஆலயத்தில் பிரசாதமாக வழங்கப்படுவது யாது?
5. நாள் மங்கலம் என்பதன் பொருள் யாது?
6. ஸ்ரீ பஞ்சாட்சர செபஞ் செய்தற்கு யோக்கியர் ஆவார் யாவர்?
7. சைவசமயத்தவர்கள் ஓதவேண்டிய தமிழ்வேதங்கள் யாவை?
8. திருவாசகம் பாடியவர் யார்?
9. தமிழ்வேதத்தை அன்புடனே நியமமாக ஓதினவர் யாது பெறுவர்?
10. ஸ்ரீ பஞ்சாட்சரத்தில் எத்தனை உரு செபித்தல் வேண்டும்?

(10 x 1 = 10 புள்ளிகள்**)**

பகுதி - II

1. பின்வரும் தொடக்கத்தையுடைய திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டினைப் பிழையின்றி எழுதுக. பாடியவரின் பெயரையும் எழுதுக.

1. "பண்ணின் நேர்மொழியாள் ....."
2. "நீள நினைந்து அடியேன் ....."
3. "இறவாத இன்ப அன்பு வேண்டிப்....."
4. "ஏக நாயகனை ....."

(2 x 5 = 10 புள்ளிகள்**)**

2. பின்வரும் தொடக்கத்தையுடைய குறட்பாக்களை பூரணமாக எழுதுக.

1. "இன் சொலால் ஈரம் ....."
2. "செய்யாமல் செய்த ....."
3. "தகுதி என ஒன்று ....."
4. "தக்கார் தகவிலர்....."
5. "பணிவுடையன் இன்சொலன் ....."

(5 x 1 = 5 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. "பண்டிகை என்ற சொல் பெருநாள், விசேடநாள் என்னும் பொருளைத் தரும்"

1. பண்டிகை என்றால் என்ன?
2. மருத்துநீர் யாரால் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது?
3. புதுவருடப்பிறப்பின் சந்தோஷமான நிகழ்வுகள் யாவை?
4. புதுவருடப்பிறப்பன்று ஆரம்பிக்கும் நாட்காரியங்கள் யாவை?
5. புதுவருடப்பிறப்பன்று எவ்வகைச் சுவையுடைய உணவுகளைச் சேர்த்து உண்பர்?

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

2. "பன்னரும் உபநிடத நூலெங்கள் நூலே
பார்மிசை ஏதொரு நூலது போலே"

1. நால்வகை வேதங்கள் யாவை?
2. உபநிடதத்தின் மறுபெயர்கள் யாவை?
3. நீர் அறிந்த உபநிடதங்கள் மூன்றின் பெயர்களைத் தருக.
4. சுவேதாஸ்வரமுனிவர் தனது சீடர்களுக்கு விளக்கிக் கூறிய விடயங்களில் மூன்றினை எழுதுக.
5. உபநிடதம் என்ற சொல்லின் பொருள் யாது?

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

3. 'கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்'

1. ஆலயத்துக்கு எவ்வாறு செல்லுதல் வேண்டும்?
2. ஆலயத்துக்கும் மனித உடலின் அமைப்புக்கும் இடையில் உள்ள தொடர்பை எழுதுக.
3. வருடம் ஒருமுறை நடைபெறும் தைமித்தியக் கிரியைகளில் எவையேனும் மூன்றை எழுதுக.
4. கோபுரங்களில் கலசங்கள் ஏன் அமைக்கப்படுகின்றன?
5. தலவிருட்சத்தின் பயன் யாது?

(5 x 2 = 10 புள்ளிகள்**)**

4. **"பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி''**

1. திருஞானசம்பந்தர் செய்தருளிய அற்புதங்களுள் எவையேனும் மூன்றை எழுதுக.
2. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் இணைந்து புரிந்த மக்கள் பணிகள் யாவை?
3. சுந்தரர் திருத்தொண்டத் தொகை இயற்ற இறைவன் எவ்வாறு அருள் புரிந்தார்?
4. மாணிக்கவாசகரின் பெற்றோர் பெயர்களை எழுதுக.
5. மாணிக்கவாசகர் வாய்பேசாப் பெண்ணை எவ்வாறு பேச வைத்தார்?

(**5 x 2 = 10** புள்ளிகள்)

5. **"நாட்டார் வழிபாடு சிறுதெய்வ வழிபாடு எனவும் அழைக்கப்படும்''**

1. நாட்டார் தெய்வங்கள் குடிகொண்டிருக்கும் இடங்கள் எவை?
2. நாட்டார் வழிபாட்டுச் சடங்குகளில் எவையேனும் மூன்றை எழுதுக.
3. நாட்டார் பெண் தெய்வங்களில் மூன்றினை எழுதுக.
4. மதுரைவீரனை எவ்வாறு வழிபடுவர்?
5. இலங்கையில் குமாரதத்தன் வழிபாடு நடைபெறும் இடங்கள் யாவை?

(**5 x 2 = 10** புள்ளிகள்)

6. **எவையேனும் <u>இரண்டிற்குச்</u> சிறு குறிப்பெழுதுக.**

1. விழுமியங்களில் மனக்கட்டுப்பாடு
2. சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார்
3. வல்லிபுர ஆழ்வார் ஆலயம்
4. கண்ணப்பநாயனார்

(**2 x 5 = 10** புள்ளிகள்)